# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வெள்ள அனர்த்த நிவாரண செயற்திட்டம் - 2011

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2011 பெப்ரவரி 18 தொடக்கம் ஆகஸ்ட் 17 வரையான காலப்பகுதியில் உள்ளவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் 2011 ஆகஸ்ட் 17 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்.ஓ.ஈ.எஸ்) மானிய உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு கட்டுப்பாடுகளிற்கு இணங்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 பெப்ரவரி 18 தொடக்கம் ஆகஸ்ட் 17 வரையான காலப்பகுதிக்குரிய செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 331,167,300 ஆகும். மீளாய்வுக்குரிய ஆறு மாத காலப்பகுதிக்கான செலவினங்களின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவினம் | 2011 பெப்ரவரி 18 தொடக்கம் ஆகஸ்ட் 17 வரையான காலப்பகுதிக்குரிய செலவினம் | |
|---|---|---|
| | இ.ரூபா | யூ.எஸ்.டொலர் |
| உணவு, குடிநீர் போத்தல் மற்றும் பிரத்தியேக தற்காப்பு ஆடைகள் | 73,598,927 | 666,722.77 |
| வேலைக்கான காசு | 257,568,373 | 2,333,277.23 |
| மொத்தம் | 331,167,300 | 3,000,000.00 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளுக்கு உள்ளாகிய ஏழு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 331,167,300 தொகையானது கீழே பட்டியலிடப்பட்டவாறு நான்கு நிவாரண செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

(i) உணவு, போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர், வைத்திய உபகரணங்கள் மற்றும் பிரத்தியேக தற்காப்பு ஆடைகள் வழங்குதல்.

(ii) நீர் சுத்திகரித்தல் மற்றும் ஆரோக்கிய முறைமைகளின் கொள்வனவு.

(iii) நகர்த்தக்கூடிய கூடாரங்கள், தற்காலிக வகுப்பறைகள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குதல்.

(iv) கழிவுகளை அகற்றுதலும் அப்பகுதியை சுத்தப்படுத்துதலும்

எனினும் நிவாரணச் செயற்பாடுகள் 05 மாவட்டங்களில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் செயற்பாட்டு இல. 01 இலேயே கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் வேலைக்கான காசு என்ற புதிய செயற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாட்டுடன் ரூபா 257,568,373 தொகை அல்லது நிதியேற்பாட்டில் 77.77 சதவீதமாக செலவினம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கவனம் செலுத்தப்படடிருந்தது.